# வேதாகமப் பெண்களும் – இறை அன்பும்

*முனைவர் ர. செல்வலதா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

***ஆய்வுச் சுருக்கம்***

*இறைவன் அன்புமயமானவன். அவனது அன்பின் ஆழத்தை புரிந்து கொள்ளும் முறைகளின் அடிப்படையில், மனிதனுக்கு இறையருள் கிடைக்கப்பெறுகிறது. இறையருள் பெற்றவர்கள் தனித்துவம் பெற்று சிறப்பைப் பெறுகிறார்கள். இச்சிறப்பானது எளிதில் கிடைத்துவிடவில்லை. பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட்டு, இறைவனால் வரும் சோதனைகளை மேற்கொண்டு வெற்றி பெறுகிறார்கள். இயேசுவின் தாய் மரியாள் மற்றும் மார்த்தாள் – மரியாள் இறைவன் மீது அன்பு கொண்டு, இறை அன்பைப் பெற்ற நிகழ்வை இவ்வாய்வின் வழி அறிய முடிகிறது.*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6402

## முன்னுரை

மனிதன் இறைவனைத் தேட வேண்டும் என்ற நிலை முதன்மை பெற்றாலும், இறைவன் தான் படைத்த மனிதனைத் தேடி வந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. மானுடனாக அவதரித்த இறைவன், இறை சக்தியை முற்றிலும் நீக்கி இறை உணர்வுடன் மனிதனோடு மனிதனாக இருந்து உண்டு, உறங்கி, உறைவிடம் கொண்டு வாழ்க்கை முறைகளை, வாழ்வின் அவசியத்தை,வாழ்வின் நோக்கத்தைப், பயன்பாட்டை கற்றுக் கொடுத்தார.˙ இறைவனது அன்பின் வழியில் நடந்தப் பெண்கள் இறையன்பினைப் பிறருக்கு எடுத்துக் கூறி, அவர்களையும் இறைவன்பால் வழிப்படுத்தினர். அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பின் வாழ்க்கை முறைகளை ஆய்வதாக வேதாகமப் பெண்களும் இறை அன்பும் என்ற இவ்வாய்வு அமைகிறது.

## ஆய்வு அணுகுமுறை

கடவுள் தம் சித்தத்தை மக்களுக்கு வெளி ப்படுத்தும் எழுத்து வடிவமான வேதாகமம், கடவுளின் வார்த்தை என்று கூறப்படுகிறது. இதன்மையப்பொருள்“கிறிஸ்துவின்மூலம் இரட்சிப்பு” என்பதாகும். பைபிள், வேதம், திருமறை, விவிலியம் என்று அழைக்கப்படுகிற இந்த மறைநூல், “பிப்ளாஸ்” என்ற கிரேக்க மொழியிலிருந்து வந்தது. பல நூல்களின் தொகுப்பு என்று பொருள் கொள்கின்ற பைபிளில் அறுபத்து ஆறு நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பிரிவுகளில் கருத்துக்கள் அடங்கியுள்ளன.

பழைய ஏற்பாடு என்பது கிறிஸ்து வருவதற்கு முன் இறைவன் மனிதனோடு செய்து கொண்ட இரட்சிப்பின் ஒப்பந்தமாகவும், புதிய ஏற்பாடு என்பது கிறிஸ்து வந்தபின்னர் மனிதனோடு அவர் செய்து கொண்ட இரட்சிப்பின் ஒப்பந்தமாகவும் உள்ளது. வேதாகமத்தில் அக்கால வரலாறு, சமூகம் முதன்மை பெறினும், புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களான இயேசுவின் தாய் மரியாள், மார்த்தாள் - மரியாள் பற்றி இவ்வாய்வு அமைவதால் விளக்க அணுகுமுறை, பகுப்பு அணுகுமுறை இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இறையன்பு

மனிதன் தன் அறிவு ஆற்றலுக்கு மீறிய சக்தி ஒன்று உண்டு என்று நம்பினான். இயற்கையின் வழியில் இறைவனைத் தேடினவன் இறைசக்தியை உணர்ந்து வணங்கினான். வழிபாடு செய்தான். இறைவன் ஒருவனாக விளங்கினான். காலங்கள் கடந்துச் செல்ல செல்ல, நாடோடி மக்கள் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கூடிவாழ முயலும் போது ஒவ்வொரு குழுவிற்கும் என்று தனிக் கொள்கைகளை வகுத்தனர். அதன் அடிப்படையில் இறை சக்தியை தங்கள் மன விருப்பங்களுக்கு ஏற்ப உருவமாக்கியும்உருவமற்றும், சமயம் என்ற பெயரில் வழிபட ஆரம்பித்தனர். அதன் அடிப்படையில் இன்றும் உலகில் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது.

சமயம் என்பது கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. அந்த கடவுளைப் பற்றியச் செய்திகள், கதைகள் மக்கள் படைத்தவை. அந்த மக்களின் இயல்புகளை அவை எடுத்துக்காட்டுகின்றன. இறைவன் மீது பற்றுள்ள மனிதர்கள் இறையடியார்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்து சமயத்தில் பெண்கள், இறையடியார்கள் தமக்கு கணவராக அமைய வேண்டும் என்று விரும்பினர். இறையடியாருக்கு திருவமுது செய்வித்தலை பெரும் பாக்கியமாகக் கருதினர். காரைக்கால் அம்மையார் தமது தெய்வ பக்தியினால் கணவரால் தெய்வமாகவும், இறைவனால் அம்மையே என்றும் அழைக்கப்பட்டார். திலகவதியார் தமக்கு நிச்சயிக்கப்பட்டவர், போரில் இறந்த பின்னும் அவரைத் தமது மனதில் கணவராக எண்ணி வேறு மணம் செய்யாது, சைவ சமயம் வளர்ச்சி அடைய சைவத்திற்குத் தொண்டாற்றினார். இது பக்தி காலத்தில் பெண்கள் செய்த இறைப்பணியாகும். வேதாகம காலத்தில் பெண்கள் இறைவனின் அன்பால் ஆட்கொள்ளப்பட்டு, இறைபக்தி உள்ளவர்களாக விளங்கினர். இறைவனின் அன்பைப் பிறருக்கு எடுத்துக் கூறக்கூடிய இறைப்பணியையும் மேற்கொண்டனர். பெண்கள் தனித்த நிலையிலும், குடும்பத்தோடும் இணைவு கொண்டு இறைப்பணி செய்ததை அறிய முடிகிறது.

## இறைவனின் தெரிந்தெடுப்பு

இறைவன் உலகத்தில் பலவிதமான உயிரனங்களைப் படைத்தார். தான் படைத்த மனிதர் தன்னை வணங்க வேண்டும் என்று அவர்விரும்பினார். அவரிடம்வந்தமக்களை அவர் ஏற்றுக் கொண்டார். ஆனாலும் அவர் சிலரைத் தெரிந்தெடுத்தார். அப்படிப்பட்டவர்கள் இறைவனின் அருளைப் பெற்று சிறந்தவர்களாக விளங்கினர்.

இறைவன் தூயவர். தான் படைத்த மக்களும் பாவத்தை ஒழித்து, தூயவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் தன் குமாரன் இந்த உலகில் குழந்தையாக அவதரிக்க எண்ணம் கொண்டார். குழந்தையின் தாயாக ஒரு கன்னியை தேர்ந்தெடுத்தார். அந்தப் பெண் மற்ற பெண்களைவிடச் சிறந்தவளாக இருக்க வேண்டும். அவளுடைய சிறப்பு தூய நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணினார். இறைவன் தேர்ந்தெடுத்த மரியாள், மகத்துவமான நல்ல குணங்களைப் பெற்றிருந்தாள்.

*தாவீதின் வம்சத்தை சார்ந்த யோசேப்பு என்ற மனிதனுக்கும்,நாசரேத் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த அன்பும், அடக்கமும், தூய்மையும் உடைய எளிமையான மரியாள் என்ற கன்னிப் பெண்ணிற்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. மரியாள் முன் தேவதூதன் தோன்றி, அவளை வாழ்த்தினான். நீ கர்ப்பவதியாகி ஒரு மகனைப் பெற்றெடுப்பாய் என்று கூறினான். அவள் கலக்கம் அடைந்து இது எப்படி சாத்தியமாகும் என்று வினவினாள்." அவளோ அவனைக் கண்டு அவன் வார்த்தையினால் கலங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்" (வே,லூக்1:29,ப.77)* மரியாள் கடவுளுடைய தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத், தூதர் மூலம் கேட்டவுடன் கலங்குகிறாள். வாழ்த்து தலைக்குறித்த சிந்தனை அவளுக்கு ஏற்படுகிறது. எதையும் பெண்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்ற நிலை அக்காலப் பெண்களுக்கு இருந்ததை அறிய முடிகிறது. ஒரு பெண்ணின் நேர்மையான உணர்வு இங்கு வெளிப்படுகிறது. *"அக்கால யுதரின் வழக்கப்படி பெற்றோர் பெண் மாப்பிள்ளையைக் குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து சிலகாலம் சென்ற பின்தான் திருமணம் நடக்கும். ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது மாப்பிள்ளை வீட்டார், பெண்ணுக்குத் தங்கள் திறமைக்கேற்ப வெகுமதிகளைக் கொடுப்பார்கள். அதன்பின் சம்பிரதாய முறைப்படி கல்யாணம் நடக்கும் வரை கணவன் - மனைவியைப் போல் ஒற்றுமையாய் இருந்தாலும் உடலுறவு கொள்ளக்கூடாது. இவ்விதமாக யுதரின் வழக்கப்படி மரியாள் யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்டு இருந்தாள்" (அம்,இயே,ப.11)* ஒரு பெண்ணை இந்த ஆண் மகனுக்கு உரியவர் என்று பெற்றோர் நியமித்துப், பரிசுப் பொருட்களைப் பரிமாறி உறுதிப்படுத்துவது இரு உள்ளப் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும் முறையாக இருந்தது. பின்பு திருமணம் என்ற உறவும் முறை இணைப்பு ஏற்பட்டது.

திருமணம் நிச்சயம் செய்யப்படும் போது கணவன் மனைவி என்ற உறவுமுறை வலுப்பெறுகிறது என்றாலும், வாழ்க்கையில் கணவன் மனைவியாக வாழும் பொழுதுதான் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகிறார்கள். சமூக அங்கீகாரம் கொடுப்பது திருமண முறையாகும். *"யுதர்களின் வழக்கின்படி விவாகச் சடங்கினிலே முதலில் பெற்றோர் மத்தியில் உறுதி. பெண் மணமக்கள் மத்தியில் நிச்சயம். மூன்றாவதாக திருமணம். இதில் நிச்சயகாலம் ஓராண்டுக் காலம் ஆகும். இந்த காலத்திலேயே அவர்களைக் கணவன் மனைவி என்று கூறுவர். ஆகவே திருமணத்திற்கு முன்பே (மத் 1:20) உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த நிச்சய காலத்தில் அவர்கள் மத்தியில் ஏதேனும் ஊடல் ஏற்படின் ஒருவரை ஒருவர் தள்ளிவிடலாம். இந்த வழக்கத்தின்படியே யோசேப்பு மரியாளைத் தள்ளிவிட யோசித்தார்"* *(ஜே.பா, சகோ, ப.13)* தேவதூதனின் வார்த்தையால் கலங்கிப் போன மரியாள் தேவதூதனை நோக்கி *"இது எப்படி ஆகும் புருஷனை அறியேனே என்றாள்" (வே,லூக்1:34,ப.77), "கேள்வி கேட்பதன் மூலம் கடவுளின் சக்தியோடு இணைந்த செயல்படும் வாய்ப்பினை பெறுகிறார் மரியா" (ஜெ,பெ,ப.68).* கேள்வி கேட்பது ஞானத்தின் பரிமாணம் இன்றைய உலகின் ஆதிக்க சக்திகள், கோட்பாடுகள், கட்டளைகள் தங்களின் திட்டமிட்ட சதிச் செயலால் பெண்களைக் கேள்விகள் கேட்காதவாறு செயலிழக்கச் செய்து வருகின்றன. அடிமை அமைப்பு முறைகளுக்கு அது அடித்தளமாக அமைந்துவிடுகிறது. தேவதூதனிடம் கேள்வி கேட்கும் அளவிற்குத் துணிவும், இறை உணர்வுடன் ஒன்றிச் செயல்பட்ட நிலையும் அறிய முடிகிறது. கணவனை அறியாதவளுக்கு

குழந்தை என்றால் சமூகம் அவளை எந்த அளவிற்கு தூற்றும் என்பதை அறிந்ததால் கேள்வி கேட்கத் துணிவு கொள்கிறாள்.

குழந்தை உருவாகும் முறை தேவதூதனால் மரியாளுக்கு விளக்கப்படுகிறது. "பரிசுத்த ஆவி உன் மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில், பிறக்கும் பரிசுத்தமுள்ளது, தேவனுடைய குமாரன் எனப்படும்" (வே,லூக்1:35,ப.77), "கடவுளுடைய ஒப்புயர்வற்ற குழந்தையின் பிறப்பை பிற குழந்தைகளின் பிறப்பிலிருந்து வேறு பிரித்துக் காட்டுவதற்காக கடவுள் தமது குமாரனின் பிறப்புக்கு ஒரு அதிசயமான அடையாளம் தரப்போவதாக வாக்களித்திருந்தார் இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகிஒருகுமாரனைப்பெறுவாள். அவருக்கு இமானுவேல் என்று பேரிடுவாள் ஏசா 7:1" (ரிச், கட, ப.75). குழந்தை பிறந்த பிறகுதான் அது ஆணா பெண்ணா என அறிந்து பெயரிடும் முறை உள்ளது. ஆனால் ஆணித்தரமாக ஆண்மகன், இமானுவேல் என்று பெயரிட வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, கன்னி வயிற்றிலிருந்து அவதரிப்பதாக வேறுபடுத்தப்பட்டது. மரியாள் தன்னை ஆண்டவருக்கு அடிமையாக ஒப்படைத்தாள். நிச்சயிக்கப்பட்ட திருமணம், குடும்பத்தார், சமூக மக்கள் பற்றி கவலை கொள்ளாமல் களிப்புடன் கடவுளைப் புகழ்ந்து பாடுகிறாள். "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். இதோ இது முதல் எல்லா சந்ததிகளும் என்னை பாக்கியவதி என்பார்கள்" (வே.லூக்1:48,ப.77) என்று மரியாள் மகிழ்ந்து கூறுகிறாள். "அருள்மிகு பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். கடவுள் தம் அடிமையின் தாழ் நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்" (ஜெ,பெ,ப.67). கடவுளின் அருள் தாழ்ந்த நிலையை ஒடுக்கப்பட்டநிலையை, பெயர் பெற்ற நிலையாக மாற்றுகின்றது. அடிமைநிலை, தாழ்நிலை என்பது கடவுள் தன்மை அல்ல. கிறிஸ்து பிறப்பு அத்தன்மையை உடைத்தெறிகின்றது.

மரியாள் உடலாலும் மனதாலும் தூய நிலையில் இறைவன் மீது அன்பு கொண்டு வாழ்ந்ததால், உலகை மீட்கும் இரட்சகர் தம் வயிற்றில் பிறக்கும் பேறுபெற்றாள். தாய் என்ற உறவு முறை தலைமையான ஒன்றாகும். அதிலும் இறைவனின் அவதாரமாகிய கிறிஸ்துவிற்குத் தாய் என்ற நிலை சிறப்பானதாகும். வேதாகம் வரலாற்றில் இயேசுவின் தாய் என்றதால் மரியாள், மற்ற பெண்களைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் பெறுகிறாள். பெண்களின் மென்மையான உயர்ந்த குணாதிசயங்களின் மொத்த உருவமாகக் கருதப்படுகிறாள். எந்த பெண்ணிற்கும் கிடைக்காத மரியாதையும் போற்றுதலையும் பெறுகிறாள். வருத்தத்துடன் கூடிய வாழ்க்கையைத் துவக்கிய அவள், இயேசுவின் தாயானதால் புகழடைந்து உலகத்தார் அனைவராலும் போற்றப்படுகிறாள். இது இறைவனின் தெரிந்தெடுப்பு என்று ஆய்வின் மூலம் உணர முடிகிறது.

**விசுவாசம்**

இறைவன் மீது கொண்ட அன்பினால், இறைவன்பால் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படுகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை அந்த நம்பிக்கை உறுதிப்படுத்துகிறது. விசுவாசம் என்பது கண்ணால் காணாததைக் குறித்த நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை வேதாகமத்தில் விசுவாசம் என குறிப்பிடப்படுகிறது.

பெத்தானியா என்ற சிறு கிராமத்தில் மார்த்தாள்- மரியாள் என்ற இரு சகோதரிகள், லாசரு என்ற சகோதரனுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இயேசுவே அவர்கள் வீட்டிற்கு வந்து போகும் அளவிற்குச் சகோதரிகள் அவர்மேல் அன்பாய் இருந்தார்கள். மார்த்தாளும் மரியாளும் இரு வேறுபட்ட

குண இயல்புடையவர்களாக இருந்தார்கள். மூத்தவள் மார்த்தாள் குடும்பத்திற்கு தாய் போன்று பொறுப்பாக வீட்டு வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வாள். இளையவள் மரியாள் இயேசு தன் வீட்டிற்கு வந்துவிட்டால், அவருடைய பாதத்தருகில் உட்கார்ந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக் கொண்டிருப்பாள். விருந்தினருக்குச் செய்யக்கூடிய முறைமைகளைத் திறம்படச் செய்யக் கூடியவள். மார்த்தாள் - மரியாளின் சகோதரன் லாசரு ஒருமுறை நோய்வாய்ப்பட்டான். அதை சகோதரிகள் ஆள் அனுப்பி இயேசுவிற்கு தெரிவித்தும் அவர் வரவில்லை. லாசரு இறந்துவிடுகிறான். நாலு நாளான பிறகு வந்து லாசருவை உயிரோடு எழுப்பினார். இந்த அற்புதத்தை கண்ட யுதர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள்.

மார்த்தாள் பல வேலைகளைச் செய்வதால் வருத்தமடைந்து, ஆண்டவரிடத்தில் வந்து நான் தனியே வேலை செய்கிறேன். என் சகோதரி எனக்கு உதவி செய்யும்படி அவளுக்கு சொல்லும் என்று ஆண்டவரிடம் முறையிடுகிறாள். "மார்த்தாளே மார்த்தாளே நீ அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" *(வே.லூக் 10:41, ப.97)* என்று கூறிய இயேசு, தேவையானது ஒன்றே இறைவன்பால் அன்பு கொண்டு இறைவனோடு இருப்பதை நீ தெரிந்துகொள் என்று கூறுகிறார். உடல் வளத்தைக் காட்டிலும் மனம் செம்மையுற வேண்டுமென்பது அவர் கருத்தாகும். நம்பிக்கை இல்லாத மார்த்தாள் இடம் இயேசு கூறும் போது "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள் உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலேயே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்" *(வே.யோ:11:23,24, ப.143,144).*

மார்த்தாள், லாசரு மரித்து நாலுநாள் ஆனதால் அவனை உயிரோடு எழுப்புவது கடினம் என நினைத்து நம்பிக்கை இல்லாத வார்த்தைகளைக் கூறுகிறாள். "அவள் அழுகிறதையும் அவளோடு கூட வந்த யுதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது ஆவியிலே கலங்கி துயரம் அடைந்து இயேசு கண்ணீர் விட்டார்" *(வே.யோ:11:33,35, ப.144).* மரியாள் இயேசுவைக் கண்டவுடன் அழுகிறாள்.

இயேசு லாசருவை சினேகித்தபடியால், சகோதரி அழுவதைக் கண்டவுடன் அவர் உணர்வால் தூண்டப்பட்டு கண்ணீர் விடுகிறார். இயேசுவின் உணர்வு மனித உணர்வுடன் இணைவதைக் காண முடிகிறது. இயேசு பிதாவிடம் வேண்டுதல் செய்து லாசருவை உயிரோடு எழுப்பினார். விருந்தினரை உபசரிக்கும் முறைகளை திறம்பட செய்வதில் மரியாள் முன் நிற்கிறாள். "மரியாள் விலை ஏறப்பெற்ற களங்கம் இல்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து அதை இயேசுவின் பாதங்களில் புசி தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்" *(வே.யோ:12:3,ப.145).* "ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து அதை உடைத்து, அந்த தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்". *(வே.மா:14:3,ப.70).* வீட்டிற்கு வரும் விருந்தினரின் பாதம்,தலையில் எண்ணெய் புசுவது இயேசு வாழ்ந்த காலத்தில் வழக்கமாக இருந்தது. விருந்தினரை உன்னத உபசரித்தலின் அடையாளமாக இப்பழக்கம் இருந்தது. மார்த்தாளைக் காட்டிலும் மரியாள் இறைவனிடம் உயர்அன்பை வெளிப்படுத்தி அவரின் அன்பைப் பெற்றாள்.

## முடிவுரை

மனிதன் இறைவனைத் தேடுகிறான். இறைவனும் சில மனிதர்களைத் தெரிந்தெடுத்து இருக்கிறார். அறவாழ்வு வாழ்ந்து இறைவனைத் தேடிக் கொண்டிருப்பவர்கள், இறைவனுக்குப் பிரியமானவர்கள். அப்படி தெரிந்தெடுக்கப்பட்ட பெண் இயேசுவின் தாயாகிறாள். கடவுள்

தன்வயிற்றில் உருவாகும் அளவிற்குப் புனிதத் தன்மையும், கீழ்ப்படிதலும் அவளுக்கு இருந்தது என்பதை அறிய முடிகிறது. கண்ணால் காணாததைப் குறித்த நம்பிக்கை, விசுவாசம் எனப்படுகிறது. மார்த்தாளிடம் விசுவாசம் குறையும்போதும், அவர்கள்மீதுகொண்ட அன்பினால், அற்புதம் நடைபெறுகிறது. மார்த்தாள் மரியாள் இயேசுவின்மேல் அன்புவைத்ததால், இறந்து நாலுநாளான பிறகும் அவர்களது தம்பி லாசருவை உயிரோடு எழுப்பினார். மனித உணர்வுடன் இறைவணர்வு ஒன்றுபட்டு கண்ணீர் விட்டார். உலக காரியத்தைக் காட்டிலும், அவரைத் தேடின மரியாள் சிறப்பு பெற்றாள். இன்றைய சூழலிலும், உலக வாழ்க்கையைத் தேடி கல்வி, பணம் என்று மனிதன் ஓடிக் கொண்டிருக்கிறான். நித்திய வாழ்வாகிய இறைவனுடன் மனிதன் வாழும் மறுமை வாழ்விற்கு, இம்மை வாழ்க்கை இறைவனைத் தேடுவதாக அமைய வேண்டும் என்பதை இவ்வாறு பதிவு செய்கிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. பரிசுத்த வேதாகமம்,இந்திய வேதாகமச் சங்கம், 206, மகாத்மா காந்தி சாலை, பெங்களூர் -560 001.
2. அம்புரோஸ், இயேசு கிறிஸ்து பரிசுத்த வேதாகம தீர்க்கதரிசனங்களின் அற்புத நிறைவேறுதல் (1992), சுவிசேஷ ஊழிய நூல்நிலையம், சென்னை -600007.
3. ரிச்சர்ட் ஏ பெனட், கடவுளைத் தேடுதல், லோகாஸ்பவன், செகன் ராபாத் - 500055.
4. ஜயசீலி, பெண்ணிய பார்வையில் விவிலியம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 629001